05.01.2017

தினமணி

**பொங்கல் பண்டிகை: வெல்லம் தயாரிக்கும் பணி தீவிரம்**

பொங்கல் பண்டிகையை முன்னிட்டு ஈரோட்டில் வெல்லம் தயாரிக்கும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது. பொங்கல் பண்டிகை ஜனவரி 14-ஆம் தேதி கொண்டாடப்பட உள்ளது. பொங்கல் பண்டிகையின்போது வழிபடுவதற்கு அச்சு வெல்லம் கடவுளுக்கு படைக்கப்படும். மேலும், சர்க்கரைப் பொங்கல் செய்வதற்கு உருண்டை வெல்லம் பயன்படுத்தப்படுவது வழக்கம்.

ஈரோடு மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் உருண்டை வெல்லம், நாட்டுச் சர்க்கரை உற்பத்தி செய்யும் ஆலைகள் செயல்பட்டு வருகின்றன. பொங்கல் பண்டிகையை முன்னிட்டு வெல்லம் தயாரிக்கும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது. வெல்லம் தயாரிப்பதற்காக சத்தி, கோபி, பவானி, கவுந்தப்பாடி, அந்தியூர் அதன் சுற்று வட்டாரப் பகுதிகளில் அறுவடை செய்யப்பட்ட கரும்புகள் ஆலைகளுக்கு கொண்டு வரப்படுகின்றன.

30 கிலோ என மூட்டைக்கு எடை வைத்து வெல்லத்தை சர்க்கரை சந்தைக்கு அனுப்புகின்றனர். அங்கு ஏலம் மூலமாக வியாபாரிகள் மொத்தமாக வாங்கிச் செல்கின்றனர். மேலும், சில வியாபாரிகள் நேரடியாக ஆலைகளுக்கு வந்து வெல்லத்தை வாங்கிச் செல்கின்றனர். இதுகுறித்து, முள்ளாம்பரப்பில் வெல்லம் உற்பத்தியில் ஈடுபடும் தொழிலாளர்கள் கூறியதாவது:
கரும்பில் இருந்து சாறு எடுத்து கலப்படம் இல்லாமல் இயற்கையான முறையில் வெல்லம் உற்பத்தி செய்கிறோம். இங்கு தயாரிக்கப்படும் வெல்லம் 30 கிலோ மூட்டையாக வியாபாரிகளுக்கு விற்பனை செய்யப்படுகிறது. கடும் வறட்சி காரணமாக கரும்பு விளைச்சல் வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளது. மேலும், கரும்புக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. கடந்த ஆண்டைவிட தற்போது விவசாயிகள் ஒரு டன்னுக்கு ரூ. 250 வரை கூடுதலாக விற்பனை செய்கின்றனர்.

இதில், வெட்டுக்கூலியாக டன்னுக்கு ரூ. 600 செலவாகிறது. இதனால் வெல்லம் தயாரிப்பதற்கு கூடுதல் செலவாகிறது. இதனால் 30 கிலோ மூட்டை ரூ. 1,200 வரை விற்பனை செய்யப்படுகிறது.

மேலும், இனிப்பு வகைகள் தயாரித்தல், மருந்துப் பொருள்கள் உற்பத்தி என வெல்லத்தின் பங்கு அதிகமாக இருப்பதால் தூத்துக்குடியில் இருந்து வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகிறது.

வரும் ஜனவரி 14-ஆம் தேதி பொங்கல் பண்டிகை சிறப்பாகக் கொண்டாடப்பட உள்ளதால் வெல்லத்தின் பயன்பாடு அதிகமாக இருக்கும். இதையொட்டி, வெல்லம் தயாரிக்கும் பணி அதிகரித்துள்ளது. எங்கள் ஆலையில் ஒரு நாளில் சுமார் 15 டன் வெல்லம் உற்பத்தி செய்கிறோம் என்றனர்.

**உருளைக்கிழங்கு கடும் விலை வீழ்ச்சி: விவசாயிகள் கவலை**



நீலகிரி மாவட்டத்தில் உருளைக்கிழங்கு கிலோ ரூ.8-க்கு விற்பனை செய்யப்படுவதால் விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர். நீலகிரி மாவட்டத்தில், தேயிலைக்கு அடுத்தப்படியாக மலைத்தோட்ட காய்கறி சாகுபடியும் அதிகமாக மேற்கொள்ளப்படுகிறது. இதில், உருளைக்கிழங்கு, காரட், பீட்ரூட், முட்டைகோஸ், காலிப்ஃபிளவர், பீன்ஸ், டர்னிப், முள்ளங்கி, மேராக்காய் போன்ற காய்கறிகளும் பயிரிடப்படுகின்றன. இதில், 500 ஹெக்டேருக்கும் கூடுதலாக உருளைக்கிழங்கு சாகுபடி செய்யப்படுகிறது.

உருளைக்கிழங்கு உற்பத்தியில் மட்டும் ரூ. 6 கோடிக்கும் கூடுதலாக விற்பனை நடைபெற்று வருகிறது. மேலும், உதகை, மேட்டுப்பாளையம், கோவை, திருச்சி, சென்னை உள்ளிட்ட பகுதிகளிலுள்ள காய்கறிச் சந்தைகளில் உதகை உருளைக்கிழங்குக்கு என தனி மவுசு உள்ளது. நீலகிரி மாவட்டத்தில்,45 கிலோ கொண்ட உருளைக்கிழங்கு மூட்டை ரூ. 1,400 முதல் ரூ.1,800 வரை விற்பனை செய்யப்பட்டு வந்தது. ஒருசில நேரங்களில் மூட்டை ரூ. 2,500 வரையிலும் விற்பனை ஆனது. ஆனால், தற்போது உருளைக்கிழங்கு விளைச்சல் அதிகரித்துள்ளதால் மூட்டைக்கு ரூ. 100 முதல் ரூ.150 வரை மட்டுமே விவசாயிகளுக்குக் கிடைக்கிறது. வியாபாரிகள் சில்லறை விலையில் கிலோ ரூ. 8 முதல் ரூ.12 வரை என விற்பனை செய்கின்றனர்.

நீலகிரி, கோவை, திருப்பூர் உள்ளிட்ட பகுதிகளில் வடமாநில தொழிலாளர்கள் அதிக எண்ணிக்கையில் உள்ளனர். இவர்கள் தங்களது உணவில் உருளைக்கிழங்கை அதிகமாகப் பயன்படுத்துவதால், மேற்கண்ட பகுதிகளில் விற்பனை அதிகரித்த போதிலும், விலை குறைத்தே விற்பனை செய்யப்படுகிறது. உருளைக்கிழங்கு விலை வீழ்ச்சி அடைந்து வருவதால் விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.
இதுகுறித்து விவசாயி சசிகுமார் கூறியதாவது:

வெளி மாநிலங்களில் இருந்து வரத்து அதிகரித்துள்ளதால் உருளைக்கிழங்கு விலை வீழ்ச்சி அடைந்துள்ளது. உத்தரப் பிரதேசம், பிகார், மேற்கு வங்கம், பஞ்சாப், கர்நாடகம், அஸ்ஸாம், மத்தியப் பிரதேசம் உள்ளிட்ட மாநிலங்களில் உருளைக்கிழங்கு சாகுபடி அதிகமாகக் காணப்படுகிறது. தமிழகத்தில், திண்டுக்கல், ஈரோடு, நீலகிரி மாவட்டங்களில் உருளைக்கிழங்கு சாகுபடி செய்யப்படுகிறது. தற்போது அனைத்துப் பகுதிகளிலும் உருளைக்கிழங்கு வரத்து அதிகரித்துள்ளதால் விலை சரியத் தொடங்கி உள்ளது. வரும் நாள்களில், விலை மேலும் சரியும் என மொத்த விற்பனையாளர்கள் தெரிவித்துள்ளனர் என்றார்.

தி இந்து
தமிழால் இணைவோம்

## வடகிழக்கு பருவமழை முடிவுக்கு வந்தது



சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் எஸ்.பாலசந் திரன் நேற்று நிருபர்களிடம் கூறியதாவது: வடகிழக்கு பருவ மழையானது, தமிழகம், ஆந்திரம், கர்நாடகம், கேரளா ஆகிய மாநிலங் களில் இருந்து விலகிவிட்டதாக அறிவிக்கப்படுகிறது. கடந்த ஆண் டில் வடகிழக்கு பருவமழையை பொறுத்தவரை தமிழகம் மற்றும் புதுச்சேரியில் இயல்பை விட 62% குறைவாக பெய்துள்ளது. கடந்த 142 ஆண்டுகளை எடுத்துக் கொண்டால், 1876-ம் ஆண்டு வடகிழக்கு பருவமழை காலத்தில் 63% குறைவாக மழை பெய்ததே, அதிகபட்ச மழை குறைவாக உள்ளது.

கடந்த அக்டோபர் மாதத்தை பொறுத்தவரை இயல்பை விட 64% குறைவாகவும், நவம்பர் மாதம் 80% குறைவாகவும், டிசம்பர் மாதம் 24% குறைவாகவும் மழை பெய்துள்ளது.

கடந்த ஓராண்டில் பெய்த மழை அளவை பொறுத்தவரை, இயல்பை விட 41% குறைவாக மழை பெய்துள்ளது.

2016-ம் ஆண்டு வடகிழக்கு பருவமழையை பொறுத்தவரை, தமிழகத்தில் 26 மாவட்டங்களில் 50 சதவீதத்துக்கு மேல், இயல்பை விட மழை குறைவாக

பெய்துள்ளது. அதிகபட்சமாக கடலூர், புதுச்சேரி, நாமக்கல் மாவட்டங்களில் 81 சதவீதம் இயல்பை விட மழை குறைவாக பெய்துள்ளது.

இவ்வாறு அவர் கூறினார்.

## பொங்கல் சிறப்பு பரிசுத் தொகுப்பு கொள்முதல் செய்யப்படும் கரும்புக்கு கட்டுப்படியாகும் விலை வழங்க வேண்டும்: தமிழக அரசுக்கு விவசாயிகள் கோரிக்கை



பொங்கல் சிறப்பு பரிசுத் தொகுப்பு குறித்து தமிழ்நாடு அரசு அறிவிப்பு வெளியிட்ட நிலையில், விவசாயிகளிடம் கொள்முதல் செய்யும் கரும்புக்கு கட்டுப்படியான விலையை வழங்க வேண்டும் என்று விவசாயிகள் வலியுறுத்தியுள்ளனர்.

பொங்கல் திருநாளை மகிழ்ச்சியுடன் கொண்டாடும் வகையில் அரிசி பெறும் ரேஷன் கார்டுதாரர்கள், போலீஸ் ரேஷன் கார்டுதாரர்கள் மற்றும் இலங்கைத் தமிழர் முகாம்வாசி ரேஷன் கார்டு தாரர்கள் ஆகியோருக்கு பொங்கல் சிறப்பு பரிசுத் தொகுப்பை தமிழக அரசு வழங்கி வருகிறது.

பச்சரிசி, சர்க்கரை ஆகிய வற்றுடன் 2 அடி நீள கரும்புத் துண்டு மற்றும் ரூ.100 ஆகியன கடந்த ஆண்டு வழங்கப்பட்டது. நிகழாண்டும் பொங்கல் சிறப்பு பரிசுத் தொகுப்பு குறித்த அரசின் அறிவிப்பு வெளியாகியுள்ளது. அதன்படி, தலா ஒரு கிலோ பச்சரிசி, சர்க்கரை மற்றும் முந்திரி, திராட்சை, ஏலக்காய் ஆகியவற் றுடன் கரும்புத் துண்டு ஒன்று வழங்கப்படும் என்று அறிவிக்கப் பட்டுள்ளது. இதனால், 1.80 கோடி குடும்பங்கள் பயன்பெறும் என்றும் அரசு

தெரிவித்துள்ளது. ஆனால், சிறப்பு பரிசுத் தொகுப்பில் ரொக்கப் பரிசு குறித்த அறிவிப்பு இல்லை.

இந்நிலையில், பொங்கல் சிறப்பு பரிசுத் தொகுப்புக்காக கரும்பு கொள்முதல் செய்யும்போது விவ சாயிகளுக்கு கட்டுப்படியான விலையை அரசு அளிக்க வேண் டும் என்று விவசாயிகள் வலியுறுத்தியுள்ளனர்.

இதுதொடர்பாக தமிழ்நாடு விவசாய சங்கங்களின் ஒருங் கிணைப்புக் குழுத் தலை வர் பி.ஆர்.பாண்டியன் கூறிய போது, “விவசாயிகளின் கோரிக் கையை ஏற்று, பொங்கல் சிறப்பு பரிசுத் தொகுப்பு குறித்த அறி விப்பை அரசு வெளியிட்டுள்ளது மகிழ்ச்சி. வறட்சியால் பாதிக்கப்பட் டுள்ள நிலையில் விவசாயிகளுக்கு உதவும் வகையில், இடைத்தரகர் இல்லாமல் நேரடியாக விவசாயிக ளிடம் கட்டுப்படியான விலைக்கு கரும்பை அரசு கொள்முதல் செய்ய வேண்டும்.

இது தொடர்பாக மாவட்ட நிர்வாகம், வேளாண் துறை, தோட்டக்கலைத் துறை, கூட்டுறவு சங்கங்களுக்கு அரசு உரிய அறிவுறுத்தல் வழங்க வேண்டும்” என்றார்.

தேசிய - தென்னிந்திய நதிகள் இணைப்பு விவசாயிகள் சங்கத் தலைவர் பி.அய்யாக்கண்ணு கூறியபோது, “கரும்பை அடி கணக்கில் கொள்முதல் செய்யும் போது, மிஞ்சும் கரும்புத் துண்டு களை விவசாயிகளால் விற்பனை செய்ய முடியாத நிலை ஏற்படு கிறது. எனவே, அடி கணக்கில் கொள்முதல் செய்யாமல், முழு கரும்பு என்ற அளவில் கட்டுப் படியான விலைக்கு கொள்முதல் செய்ய வேண்டும்” என்றார்.

தமாகா விவசாய அணி மாநிலத் தலைவர் புலியூர் நாகராஜன் கூறியபோது, “செங்கரும்புச் சாகுபடி பரப்பு நிகழாண்டு வெகுவாகக் குறைந்துள்ள நிலை யில், விவசாயிகளுக்கு கட்டுப்படி யாகும் விலைக்கு அரசே நேரடியாக கரும்பை கொள்முதல் செய்ய வேண்டும்” என்றார்.

## நொய்யல் இன்று 20: 86 கிராமங்கள்; 28,596 விவசாயிகள்; ரூ.24.8 கோடி இழப்பீடு



சின்னமுத்தூரில் ஓடும் நொய்யல் ஆறு.

1997-ம் ஆண்டில் ஒரத்துப்பாளையம் அணையில் மீன்கள் செத்து மிதந்த காலகட்டம். முறைகேடாக இயங்கிய சாய ஆலைகள் மீது அரசு பல்வேறு நடவடிக்கைளை எடுத்தது.

‘ஆற்றில் தண்ணீரை சுத்திகரித்தே விடவேண்டும். அதில் வண்ணத் தன்மை இருக்கக் கூடாது; ஒரு லிட்டர் நீரில் உப்புத்தன்மை 2,100 பிபிஎம் அளவுக்குள் இருக்க வேண்டும். ஓராண்டுக்குள் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க வேண்டும். இதற்காக மாநில, மத்திய அரசுகள் தலா 25 சதவீத மானியம் அளிக்கும். குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் சுத்திகரிப்பு வசதி ஏற்படுத்தாத சாயப்பட்டறைகளுக்கு சீல் வைக்கப்படும்’ என்றெல்லாம் அறிவிப்புகள் வெளியாகின.

கரூர் மாவட்ட விவசாயிகள் சங்கம் போல, அணைக்கு மேல்பகுதியில் உள்ள ஒரத்துப்பாளையம், சின்னமுத்தூர் விவசாயிகளும் நீதிமன்றத்தில் பல்வேறு வழக்குகளைத் தொடர்ந்தனர்.

2002-ல் சூழலியல் இழப்பீடு ஆணையத்தை நிறுவ உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது. அந்த ஆணையம் 2002 முதல் 2004 வரை அண்ணா பல்கலைக்கழக குழுவினர் மூலம் ஆய்வு செய்து, பாதிக்கப்பட்ட 86 கிராமங்களைச் சேர்ந்த 28,596 விவசாயிகளுக்கு ரூ.24.8 கோடி இழப்பீடு வழங்க பரிந்துரை செய்தது.

“இது குறைந்த இழப்பீடு. பாதிக்கப்பட்ட அனைத்து விவசாயிகளையும் கணக்கில் கொள்ளவில்லை. அண்ணா பல்கலைக்கழக சுற்றுச்சூழல் ஆய்வுக் குழுவினர் மேம்போக்காக ஆய்வு செய்துவிட்டனர்” என ஒரு தரப்பு விவசாயிகள் மீண்டும் முறையீடு செய்தனர்.

## 2 குழுக்கள்

2005-ல் தொடர்ந்த இந்த வழக்கில் விவசாயிகள் முன்வைத்த ஆதாரங்களை நீதிமன்றம் ஏற்றுக் கொண்டது. அதனடிப்படையில் மாசுபாட்டை கணக்கிட சிவராமன், மோகன் தலைமையில் 2 குழுக்களை நீதிமன்றம் ஏற்படுத்தியது.

2006-ம் ஆண்டு சிவராமன் கமிட்டி, ஒரத்துப்பாளையம் அணையின் கீழ்ப்பகுதிவரை புதர்களை அகற்றி, கல் நட்டு அளவீடுகள் செய்தது. அணையின் துருப்பிடித்த மதகுகளை சீரமைத்தது. இதேபோல மோகன் கமிட்டி, சாயக்கழிவுகளை சுத்திகரிக்கும் மறுசுழற்சி நிலையங்களை அமைக்க, அளவீடு செய்ய பல்வேறு வழிவகைகளை செய்தது. அதைத் தொடர்ந்தும் நீதிமன்றம் மூலமாகவும், அரசுத் தரப்பிலும் பல்வேறு உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டன.

எனினும், நொய்யலில் சுத்திகரிக்கப்படாமலேயே சாயக்கழிவுகள் மீண்டும் விடப்படுவதாக விவசாயிகள் நீதிமன்றத்தில் மனு அளித்தனர். இதனால், 2011-ல் அனைத்து சாய ஆலைகளையும் மூடும்படி நீதிமன்றம் உத்திரவிட்டது. பூஜ்யமுறை டிஸ்சார்ஜ் அடிப்படையில் கழிவுநீரை சுத்திகரித்து விடும் ஆலைகளை மட்டும் பரிசோதனைக்கு உட்படுத்தி, பிறகு அவற்றுக்கு உரிமம் அளிக்கவும் உத்தரவிடப்பட்டது.

அதன் எதிரொலியாக 2011 ஜனவரி 28-ம் தேதி திருப்பூரில் 751 சாய ஆலைகள் மூடப்பட்டன. அதனால் பனியன் நகரம் மீண்டும் தொழில் நெருக்கடியில் சிக்கியது.

துணிகளுக்கு சாயமேற்ற மேற்கு வங்கம், குஜராத்துக்குச் சென்றனர் ஏற்றுமதியாளர்கள். தொடர்ந்து, 2012-ல் 380 சாய ஆலைகள் இயங்க அனுமதி அளிக்கப்பட்டது. அவை, ரூ.1070 கோடியில் அமைக்கப்பட்ட 18 பொதுசுத்திகரிப்பு நிலையங்களுடன் இணைந்து, கழிவுநீரை முழுமையாக சுத்திகரித்து, மீண்டும் பயன்படுத்துவதாக உறுதி அளித்ததால், மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் அனுமதி அளித்தது.

இதேபோல மேலும் 70 சாயப்பட்டறைகள், ரூ.1 கோடி முதல் ரூ.1.50 கோடி மதிப்பில், தனி சுத்திரிப்பு நிலையம் அமைத்துக்கொண்டன. அவையும் கழிவுநீரை சுத்திகரித்து, மறுசுழற்சிக்கு பயன்படுத்துகிறது என்றுகூறி, தொடர்ந்து இயங்க அதிகாரிகள் அனுமதி அளித்தனர்.

**நீரை தேக்கக் கூடாது**

இதற்கிடையில், "நீர்நிலை மாசு காரணமாக, எந்தக் காரணத்தைக் கொண்டும் ஒரத்துப்பாளையம் அணையில் நீரை தேக்கக் கூடாது. அணைகளின் நீர்ப்போக்கிகள் திறந்தே இருக்க வேண்டும்" என்ற நீதிமன்ற ஆணையைப் பெற்றனர் விவசாயிகள்.

இதனால், தற்போது வரை நொய்யலாற்றில் திருப்பூரை அடுத்துள்ள மண்ணரை அணை தொடங்கி, எந்த அணையிலும் தண்ணீர் தேக்கப்படாமல், நேரே காவிரியில் கலந்துகொண்டிருக்கிறது நொய்யல். இந்த ஏற்பாடுகளால் பிரச்சினை ஓய்ந்ததா? அதுதான் இல்லை.



▲ திருப்பூரில் உள்ள பொது சுத்திகரிப்பு ஆலையில் மறுசுழற்சி செய்யப்படும் கழிவுநீர்.

"இப்போதும் சாய நீர் சுத்திகரிக்கப்படாமலே நொய்யலில் விடப்படுகிறது" என்கிறார்கள் பாதிக்கப்பட்ட விவசாயிகள். அவர்களில் ஒரு பிரிவினர் "சாய நீரையே விவசாயத்துக்குப் பயன்படுத்துகிறாம். எனவே, நீர்நிலைகளில் தண்ணீரைத் தேக்க அனுமதியுங்கள். பாசனத்துக்குப் பயன்படுத்திக் கொள்கிறோம்" என்கின்றனர். ஆனால், மற்றொரு பிரிவினரோ "இந்த நீர் நீண்டதூரத்திலிருந்து வருவதால், தனக்குத்தானே சுத்திகரித்துக் கொள்கிறது.

அதைத் தேக்கினால் மீண்டும் விபரீதம் ஏற்படும். நிலம் பாழாகும். எனவே, நீரைத் தேக்கவே கூடாது" என்று எதிர்க்கின்றனர்.

இந்த விநோத முரண்பாடு, இப்பகுதி மக்களின் வாழ்நிலைக்கு மட்டுமின்றி, இயல்புத் தன்மைக்கும் தொந்தரவை ஏற்படுத்துகிறது. அதை இந்த கிராமங்களில் பயணிக்கும்போது அறிந்துகொள்ள முடிகிறது.

**'கண்ணுக்கு தெரியாத சூழல் பேரிடர்'**

இந்தப் பிரச்சினைக்காக 2005-ல் நீதிமன்றத்தை நாடியவர் சுற்றுச்சூழல் ஆர்வலர் பிரத்விராஜ். இவர் முன்வைத்த ஆதாரங்களை நீதிமன்றம் ஏற்றுக் கொண்டு, நொய்யல் மாசுபாட்டை கணக்கிட சிவராமன், மோகன் தலைமையில் 2 குழுக்களை ஏற்படுத்தியது.

இதுகுறித்து அவர் 'தி இந்து' விடம் கூறும்போது, "2001-ல் நொய்யல் பிரச்சினையை ஆராய்ந்த நீரியல் நிபுணர் சிவனப்பனுடன் இணைந்து பணியாற்றினேன். அப்போது கிடைத்த அனுபவம், பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உதவத் தூண்டியது. எனவே, நீதிமன்றத்தில் விவசாயிகளுக்கு ஆதரவாக வழக்குத் தொடர்ந்தேன். அப்போது திருப்பூர் சாயப்பட்டறைகள் தினமும் 115.2 மில்லியன் லிட்டர் நீரைப் பயன்படுத்தி, 9,000 டன் சாயக்கழிவை நொய்யலில் கொட்டின. நதியில் கலந்துள்ள வேதிப்பொருட்கள், அந்த நீரை குடிப்பதற்கும், விவசாயத்துக்கும் பயன்படாத வகையில் மாசுபடுத்தியிருந்தன. நிலத்தடிநீர் முற்றிலும் பாதிக்கப்பட்டிருந்தது. ஆற்று நீரில் நன்மை செய்யும் நுண்ணுயிரிகள் சிதைந்துவிட்டன.

நொய்யல் கரையோர கிராமங்களை ஒட்டியிருந்த மக்கள் ஆரோக்கியமாக இல்லை. 1990-ம் ஆண்டுக்கு முன் வரை சர்க்கரை, மாரடைப்பு, கிட்னி பாதிப்புகள் யாருக்கும் வந்ததேயில்லை. ஆனால், நாங்கள் நடத்திய ஆய்வில், ஒரத்துப்பாளையம் கே.பி.சென்னியப்பன் ஓராண்டுக்கு முன் குடல் புற்றுநோயால் இறந்தது தெரியவந்தது. அவர் 3 ஆண்டுகள் இங்குள்ள கிணற்று நீரையே பருகியுள்ளார். இதேபோல, நொய்யல் நீரைக் குடித்த பசுவின் பாலை அருந்தி, மற்றொருவரும் இந்த நோயால் இறந்ததும் தெரியவந்தது. மேலும், இந்த நீரால் மலட்டுத்தன்மை, உயர் ரத்த அழுத்தம், மூட்டு வலி, மனநோய் பாதிப்புகள் ஏற்பட்டதும் ஆய்வில் தெரியவந்தது.

இங்கு மனித உயிர்களுக்கு மதிப்பு இல்லாமல் போய், உணவுச் சங்கிலியே உருக்குலைந்து விட்டதும் மருத்துவ நிபுணர்கள் மூலம் கண்டுபிடிக்கப்பட்டது. நொய்யலுக்கே உரிய ‘நீர் நாய்’ என்ற விலங்கு அழிந்துவிட்டது. அதுபோல, நன்னீர் விலங்குகள், நீர் பாம்புகளும் இறந்துள்ளன.

ஊத்துக்குளி பகுதியில் நொய்யல் ஆற்றங்கரையில் எந்த பறவைகளும் பறக்காததும் கண்டறியப்பட்டது. சுமார் 58,555 ஹெக்டேர் நிலங்களும், 28,596 விவசாயிகளும் பாதிக்கப்பட்டதும் உறுதிப்படுத்தப்பட்டது. பின்னர், நீதிமன்ற உத்திரவின்பேரில் சுற்றுச்சூழல் இழப்பீட்டு ஆணையத்தை மத்திய அரசு அறிவித்தது.

தற்போது வரை விவசாயிகளுக்கு சாதகமான நிலையிலேயே நீதிமன்றத் தீர்ப்புகள் வந்துள்ளன. நொய்யல் மாசுவுக்கு எதிராக நிரந்தரத் தடை விதித்துவிட்டது உச்ச நீதிமன்றம். ‘ஜீரோ டிஸ்சார்ஜ் இல்லாமல் நீரை வெளியேற்றவே கூடாது. விவசாயிகளுக்கான இழப்பீடு குறித்த அனைத்து மனுக்களையும் 6 மாதங்களுக்குள் தேசிய பசுமைத் தீர்ப்பாய சென்னைக் கிளையில் முடித்துவைக்க வேண்டும் என்றும் உயர் நீதிமன்றம் உத்திரவிட்டுள்ளது. சாயப்பட்டறை உரிமையாளர்கள் குறிப்பிட்ட தொகையை செலுத்தியும், பெரும்பான்மை விவசாயிகளுக்கு தொகை கிடைக்கவில்லை. சுனாமி, பூகம்பத்தால் ஏற்படுவது மட்டும் பேரிடர் அல்ல. சாலை விபத்துகளில் ஓராண்டுக்கு 10 பேர் இறக்கிறார்கள். ஆனால், இதைவிட பெரிய பேரிடர் கண்ணுக்குத் தெரியாமல் உள்ளது. அது சூழல் பேரிடர். ஒரு நாளைக்கு 2 பேர் வீதம் சாவதும், மிருகங்கள், உயிரினங்கள், தாவரங்கள் அழிவதையும் பேரிடர் என்றே கருத வேண்டும்.

**கிராமங்களுக்கு பரிந்துரைக்கப்பட்ட இழப்பீடு**

சூழலியல் இழப்பீட்டு ஆணைய உத்தரவின்பேரில் 2002 முதல் 2004 வரை பாதிக்கப்பட்ட பகுதிகளில் ஆய்வு நடத்தியது அண்ணா பல்கலைக்கழக குழு. அந்தக் குழுவினர் இழப்பீட்டுக்காக பரிந்துரைத்த கிராமங்கள் விவரம்:

14 கிராமங்களுக்கு ஏக்கருக்கு தலா ரூ.240-ம், 17 கிராமங்களுக்கு தலா ரூ.650-ம், 12 கிராமங்களுக்கு ரூ.1,090-ம், 26 கிராமங்களுக்கு ரூ.3,600-ம், 3 கிராமங்களுக்கு ரூ.4,860-ம், ஒரு கிராமத்துக்கு ரூ.6 ஆயிரமும், 7

கிராமங்களுக்கு ரூ.12 ஆயிரம், 6 கிராமங்களுக்கு ரூ.14,500 வழங்க பரிந்துரைக்கப்பட்டது.

கரூர் வட்டம்: ரூ.650 - வேட்டமங்கலம். ரூ.3,600 - காதப்பாறை, புஞ்சை தோட்டக்குறிச்சி, மின்னாம்புள்ளி, புஞ்சை புகழூர் தெற்கு, புஞ்சை புகழூர் வடக்கு, மண்மங்கலம், திருக்காடுதுறை, ஆத்தூர், பஞ்சமாதேவி, குப்பிச்சிபாளையம், புஞ்சை கடம்பன் குறிச்சி.

அரவக்குறிச்சி வட்டம்: ரூ.650 - கார்வழி, அஞ்சூர், ரூ.3600 - துக்காச்சி, தென்னிலை மேல்பாகம், அத்திப்பாளையம், குத்தம். ரூ.12000 - முன்னூர், தென்னிலை கீழ்பாகம்.

ஈரோடு மாவட்டம் பெருந்துறை வட்டம்: ரூ.650 - எலக்கட்டாம்பாளையம், பாசுவார்பட்டி, எல்லைகிராமம், நஞ்சை பாலத்தொழுவு, வடுகன்பாளையம். ரூ.3600 - முரட்டுப்பாளையம், அக்கரகாரம் கத்தாங்கண்ணி. ரூ.14500 - ஒரத்துப்பாளையம், சர்க்கார் பெரியபாளையம், அணைப்பாளையம், கொடுமணல்.

ஈரோடு வட்டம்: ரூ.650 - வடிவுள்ள மங்கலம், கொல்லங்கோயில். ரூ.3600 - வேலம்பாளையம், மறவா பாளையம், குட்டப்பாளையம், கணபதி பாளையம், பழைய கோட்டை. ரூ.14500 - கத்தாங்கண்ணி, தம்மரெட்டிபாளையம். திருப்பூர் வட்டம்: ரூ.240 - தொட்டிபாளையம், செட்டிபாளையம், நல்லூர். ரூ.1090 - முதலிபாளையம், புதுப்பாளையம், காணியாம்பூண்டி, நெருப்பெரிச்சல், மங்கலம், மண்ணரை. ரூ.4,860 - ஆண்டிபாளையம், வீரபாண்டி.

கோவை: ரூ.240 - அனுப்பர்பாளையம், தென்னமநல்லூர், நாயக்கன்பாளையம், தேவராயபுரம், குனியமுத்தூர், வெள்ளலூர்.

கோவை நகரம்: ரூ.240 - சரவணம்பட்டி, கவுண்டம்பாளையம், தெலுங்குபாளையம், சங்கனூர், சர்க்கார் சாமக்குளம், பேரூர் செட்டிபாளையம், பேரூர். ரூ.1090 - டவுன்ஹால், சிங்காநல்லூர், காளப்பட்டி, விளாங்குறிச்சி, கள்ளிப்பாளையம், சின்னவேடம்பட்டி. ரூ.4860 - சவுரிபாளையம். ரூ.6000 - கிருஷ்ணராயபுரம்.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

## மீனவர்களுக்கு நவீன ஆழ்கடல் மீன்பிடி பயிற்சி வகுப்பு சென்னையில் 13–ந் தேதி வரை நடக்கிறது




சென்னை,

புதிய தொழில்நுட்பத்தில் மீன் பிடிக்க மீனவர்களுக்கு நவீன ஆழ்கடல் மீன்பிடி பயிற்சி வகுப்புகள் சென்னையில் 13–ந் தேதி வரை நடக்கிறது.

<u>மீனவர்கள் பிரச்சினை</u>

பாக் நீரிணை பகுதியில் மீன் பிடிக்கும் போது தமிழக மீனவர்கள் , இலங்கை கடற்படையினரால் தாக்கப்படும் சம்பவங்கள் தொடர்கதையாகி வருகின்றன. மீனவர்கள் கைது செய்யப்படுவதும் , மீனவர்கள் பிடித்த மீன்களை அபகரித்துக்கொண்டு, படகுகளை தாக்கி சேதப்படுத்துவதும் வாடிக்கையாகி விட்டது.

எனவே மீனவர்கள் தாக்கப்படுவதை தவிர்க்கவும் , நவீன தொழில்நுட்பங்களை மீனவர்கள் அறிந்துகொள்ளவும் ‘அதிநவீன ஆழ்கடல் மீன்பிடி பயிற்சி ’ எனும் திட்டத்தை மத்திய அரசு அறிவித்தது. அதன்படி மீனவர்களுக்கு ஆழ்கடல் மீன்பிடி பயிற்சியையும் , நவீன தொழில்நுட்பத்தை கையாள்வது குறித்தும் விளக்க அதிகாரிகளுக்கு கடந்த ஆண்டு இறுதியில் திறனாய்வு பயிற்சி அளிக்கப்பட்டது.

பயிற்சி தொடங்கியது

இந்த பயிற்சியை இலவசமாக நடத்த மத்திய மீன்வளத்துறை கடல்சார் – பொறியியல் பயிற்சி நிறுவனத்துக்கு (சிப்னெட்) மத்திய அரசு உத்தரவிட்டது. பயிற்சியில் இணைய 20 மீனவர்கள் விண்ணப்பித்து இருந்தனர். சென்னை ராயபுரம் எஸ்.என்.சாலையில் உள்ள 'சிப்னெட்' பயிற்சி நிறுவனத்தில் நேற்று முன்தினம் பயிற்சி தொடங்கியது.

முதல் நாள் பயிற்சி வகுப்பில் ஆழ்கடல் மீன்பிடி தொடர்பான ஆவண காட்சிகள் காட்டப்பட்டன. நவீன விசைப்படகுகள் பயன்படுத்துவது , கடல்சார் பிரச்சினைகள், மீன்பிடித்தலின் போது ஏற்படும் எல்லை பிரச்சினைகள் மற்றும் விளைவுகள் குறித்து மீனவர்களுக்கு அதிகாரிகள் விளக்கம் அளித்தனர்.

மாற்று முறை செயல்பாடு

2–ம் நாளான நேற்று விசைப்படகுகளின் இயக்கம் , ஆழ்கடலில் விசைப்படகுகளை இயக்குவது ?, விசைப்படகில் உள்ள எலக்ட்ரானிக் கருவிகள், நவீன தொலை தொடர்பு கருவிகளை கையாள்வது? குறித்து பயிற்சி தரப்பட்டது.

பின்னர் காசிமேடு மீன்பிடி துறைமுகத்தில் நிறுத்தப்பட்டு இருந்த 'சிப்னெட்' பயிற்சி நிறுவனத்துக்கு சொந்தமான 'ஸ்கிப்பர்–2' நவீன விசைப்படகுக்கு மீனவர்கள் அழைத்து செல்லப்பட்டனர். விசைப்படகில் உள்ள இழுவை விசை திறன் கருவிகள் , மீன்பிடி வலை இழுவை எந்திரம் உள்ளிட்டவற்றின் செயல்பாடுகள் குறித்து மீனவர்களுக்கு அதிகாரிகள் விளக்கினர். இக்கட்டான நேரத்தில் இழுவை எந்திரத்துக்கான மாற்று முறை செயல்பாடு குறித்தும் விளக்கம் தரப்பட்டது.

காந்த அதிர்வு

விசைப்படகு இயக்க தேவையான எந்திரங்கள் குறித்து மீனவர்களுக்கு அதிகாரிகள் எடுத்து கூறினர். விசைப்படகில் திசை காட்டும் கருவிகளை எப்படி பயன்படுத்துவது? ரேடார் கருவிகள் மூலம் எப்படி கடல் திசையை கணிப்பது ? தொலைதொடர்பு கருவிகளின் இயக்கம் மற்றும் பயன்பாடு , இழுவலை தவிர்த்து ஆழ்கடலில் குறிப்பிட்ட எல்லைக்குள் இருக்கும் மீன்கள் பற்றி அறிய காந்த அதிர்வு கருவிகள் குறித்து விளக்கம் அளிக்கப்பட்டது.

இலங்கை நாட்டு எல்லைக்குள் போகாமல் எச்சரிக்கை செய்யும் 'எக்கோ' சவுண்ட் ரக கருவிகளை பயன்படுத்தும் முறை குறித்தும் செயல்விளக்கம் காட்டப்பட்டது.

சான்றிதழ்

இதுகுறித்து 'சிப்னெட்' அதிகாரிகள் கூறியதாவது:–

மீனவர்களுக்கு காலையில் திறனாய்வு பயிற்சியும் , பிற்பகலில் செயல்முறை பயிற்சியும் 13–ந் தேதி வரை அளிக்கப்படுகிறது. வரும் நாட்களில் மீனவர்கள் 3 பிரிவினராக பிரிக்கப்பட்டு அதில் ஒரு பிரிவினருக்கு சென்னையில் பயிற்சி அளிக்கப்படும். இதர 2 பிரிவு மீனவர்களுக்கு கொச்சி , மும்பையில் உள்ள 'சிப்னெட்' நிறுவனத்தில் பயிற்சி வழங்கப்படும். பயிற்சி முடிந்ததும் உரிய சான்றிதழ்களுடன் ஆழ்கடலில் மீன்பிடிப்பதற்கான அனுமதி வழங்கப்படும்.

ஆழ்கடலில் அதிகம் வாழும் 'சூரை' வகை மீன்களை பிடிக்க தெரியாத்தனமாக எல்லை தாண்ட வேண்டிய சூழ்நிலை மீனவர்களுக்கு ஏற்பட்டு விடுகிறது. காந்த அதிர்வு உள்ளிட்ட அதிநவீன தொழில்நுட்ப உதவியின் மூலம் ஆழ்கடலில் எந்த பகுதியில் மீன்கள் அதிகம் உள்ளது ? அது தமிழகத்துக்கான வரையறுக்கப்பட்ட எல்லையா? என்பது குறித்து சுலபத்தில் அறிந்து கொள்ளும் வழிமுறைகள் குறித்தும் பயிற்சி அளிக்கப்படுகிறது. இவ்வாறு அவர்கள் கூறினர்.

## வடகிழக்கு பருவ மழை இயல்படை விட62 சதவீதம் குறைவு: வானிலை ஆய்வு மையம்



சென்னை,

தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் கடந்த அக்டோபர் மாதம் 30–ந் தேதி வட கிழக்கு பருவமழை தொடங்கியது. வட கிழக்கு பருவமழை தொடங்கினாலும் இந்த வருடம் ஒரு சில நாட்கள் மட்டுமே மழை பெய்தது. அதுவும் பரவலாக மழை பெய்யவில்லை.

கனமழையாகவும் பெய்யவில்லை. இதனால் வட கிழக்கு பருவமழை பொய்த்து போனது. போதிய அளவு மழை பொழியாததால் தமிழகம் முழுவதும் வறட்சி

காணப்படுகிறது. சென்னையிலும் இந்த ஆண்டு கடும் குடிநீர் தட்டுப்பாடு ஏற்படும் என்று கூறப்படுகிறது.

இந்த நிலையில் வடகிழக்கு பருவமழை முடிவடைந்து விட்டது என்று வானிலை ஆய்வு மையம் அதிகாரப்பூர்வமாக அறிவித்தது.
இந்த வட கிழக்கு பருவமழை காலத்தில் சராசரி அளவை அல்லது இயல்பான அளவை விட 62 சதவீதம் குறைவாக மழை பெய்துள்ளது" இவ்வாறு வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

## நாகர்கோவிலில் மாவட்ட அளவிலான வேளாண்மை கண்காட்சி கலெக்டர் சஜ்ஜன்சிங் சவான் தொடங்கி வைத்தார்



நாகர்கோவில்,

நாகர்கோவிலில் மாவட்ட அளவில் நடந்த வேளாண்மை கண்காட்சியை கலெக்டர் சஜ்ஜன்சிங் சவான் தொடங்கி வைத்தார்.

கண்காட்சி

வேளாண்மை தொழில் நுட்ப மேலாண்மை முகமை மற்றும் பிரதான் மந்திரி கிரிஷி சிஞ்சாயி யோஜனா திட்டம் மூலம் நிதிஉதவியுடன் மாவட்ட அளவிலான வேளாண்மை கண்காட்சி மற்றும் கிசான் மேளா பயிற்சி ஆகியவை நாகர்கோவிலில் நேற்று நடந்தது. இப்பயிற்சிக்கு கலெக்டர் சஜ்ஜன்சிங் சவான் தலைமை தாங்கி, குத்துவிளக்கேற்றி தொடங்கிவைத்து பேசியதாவது:-

இந்த பயிற்சியில் விவசாயிகளுக்கு நுண்ணீர் பாசனம் , சொட்டுநீர் பாசனம் , தெளிப்பு நீர் பாசனம் மற்றும் மழைநீர் தெளிப்பு ஆகிய திட்டங்களின் மூலம் எவ்வாறு அதிக மகசூல் பெறலாம் எனவும் , அரசால் அளிக்கப்படும் மானியம் மற்றும் திட்டங்கள் குறித்து விவசாயிகளுக்கு தெரிவிக்கப்படும். எனவே பயிற்சியில் கலந்து கொண்ட அனைத்து விவசாயிகளும், தோட்டக்கலைத்துறை

மற்றும் வேளாண்மை துறை அதிகாரிகளால் வழங்கப்படும் நெறிமுறைகளை பின்பற்றுவதோடு, மற்ற விவசாயிகளுக்கும் அவற்றை எடுத்துக்கூறி , விழிப்புணர்வு பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

பயன்பெற வேண்டும்

விவசாயிகளுக்கு விவசாயம் செய்ய பல்வேறு வங்கிகள் மூலம் அரசு கடனுதவிகளையும் வழங்கி வருகிறது. இதை அனைத்தையும் விவசாயிகள் நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும் விவசாயிகளுக்கு பயிற்சியில் ஏதேனும் சந்தேகம் இருந்தால் அதனை சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கேட்டு தெரிந்து கொள்வதோடு , இந்த வழிமுறைகளை பின்பற்றி விவசாயிகள் அனைவரும் பயன்பெற வேண்டும்.

இவ்வாறு கலெக்டர் சஜ்ஜன்சிங் சவான் பேசினார்.

விவசாயிகள்

இப்பயிற்சியில் சுமார் 100-க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர். முன்னதாக தோட்டக்கலை துறை மற்றும் வேளாண்மை துறை சார்பாக வைக்கப்பட்டிருந்த கண்காட்சியை கலெக்டர் பார்வையிட்டார். கண்காட்சியில் விவசாயத்துக்கு தேவையான கருவிகள் , எந்திரங்கள், சொட்டுநீர் பாசனம் மற்றும் தெளிப்பு நீர் பாசன கருவிகள் , சொட்டுநீர் பாசன திட்டத்தின் மாதிரி ஆகியவை வைக்கப்பட்டு இருந்தன.

நிகழ்ச்சியில் வேளாண்மைத்துறை இணை இயக்குனர் இளங்கோ , கலெக்டரின் நேர்முக உதவியாளர் (விவசாயம்) நிஜாமுதீன் , தோட்டக்கலை துறை இணை இயக்குனர் அசோக் மேக்ரின் , வேளாண்மை பொறியியல் துறை உதவி செயற்பொறியாளர் ஆனந்த்பாபு, பேராசிரியர் மற்றும் தலைவர் (வேளாண்மை ஆராய்ச்சி நிலையம்) ஜேன் சுஜாதா உள்ளிட்ட அரசு அலுவலர்கள் , விவசாயிகள் கலந்து கொண்டனர்.

## பேரையூர், டி.கல்லுப்பட்டி பகுதிகளில் மழை இன்றி கருகிப்போன மானாவாரி பயிர்கள்



பேரையூர்,

பேரையூர், டி.கல்லுப்பட்டி பகுதிகளில் மழையின்றி கருகிப் போன பயிர்களை வேளாண்மைத்துறையினர் ஆய்வு செய்தனர்.

<u>மழையின்றி கருகின</u>

பேரையூர், டி.கல்லுப்பட்டி பகுதிகளில் சுமார் 25 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் விவசாயிகள் மானாவாரி பயிர்களை பயிரிட்டிருந்தனர். பருத்தி 5 ஆயிரம் ஏக்கரிலும், பாசிப் பயறு ஆயிரத்து 500 ஏக்கரிலும், உளுந்து 500 ஏக்கரிலும், துவரை 400 ஏக்கரிலும், மக்காச்சோளம் 6 ஆயிரம் ஏக்கரிலும் , சோளம் 2 ஆயிரத்து 600 ஏக்கரிலும், நெல் ஆயிரத்து 500 ஏக்கரிலும், இதரப்பயிர்கள் 5 ஆயிரம் ஏக்கரிலும் பயிரிடப்பட்டிருந்தன.

ஆனால் மழையின்றி இந்தப் பயிர்கள் அனைத்தும் கருகிப்போயின. கடந்த 4 மாதங்களுக்கு முன்பு பெய்த அரை குறை மழையை நம்பி விவசாயம் செய்திருந்த மானாவாரி விவசாயிகள் மிகுந்த நஷ்டத்திற்கு ஆளாக்கப்பட்டுள்ளனர். இதனால் அவர்கள் மிகுந்த மன வேதனை அடைந்துள்ளனர்.

பேரையூர் மற்றும் டி.கல்லுப்பட்டி பகுதிக்கு வந்த வேளாண்மைத் துறை அதிகாரிகள் மழையின்றி கருகிப் போன பயிர்களை நேற்று ஆய்வு செய்தனர்.

<u>அறிக்கை</u>

இதனைத் தொடர்ந்து மழை இல்லாததால் விவசாயிகளுக்கு ஏற்பட்டு உள்ள இழப்புகள் தொடர்பாக மாவட்ட நிர்வாகத்திற்கு வேளாண்மைத்துறையினர் அறிக்கை அனுப்ப உள்ளனர்.

வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு தமிழக அரசு உரிய நிவாரண உதவியினை வழங்கிட வேண்டும் என்றும் , பிரதமரின் பயிர் காப்பீடுத் திட்டத்தில் இன்சூரன்ஸ் செய்த விவசாயிகளுக்கு உரிய இழப்பீட்டு தொகையை வழங்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டு உள்ளது.

## கூடலூர் வனப்பகுதியில் பூத்து குலுங்கும் காட்டு சூரிய காந்தி மலர்கள் சுற்றுலா பயணிகள் கண்டு ரசிப்பு



கூடலூர்,

கூடலூர் வனப்பகுதியில் காட்டு சூரிய காந்தி மலர்கள் பூத்து குலுங்குகிறது. இதனை சுற்றுலா பயணிகள் மட்டுமின்றி பொதுமக்களும் கண்டு ரசித்து வருகின்றனர்.

காட்டு சூரியகாந்தி மலர்கள்

மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியில் நீலகிரி அமைந்து உள்ளதால் அரிய வகை தாவரங்கள், வனவிலங்குகள் புகலிடமாக விளங்குகிறது. குறிப்பாக கூடலூர் , முதுமலை, நடுவட்டம் வனப்பகுதியில் 100–க்கும் மேற்பட்ட ஒட்டுண்ணி தாவரங்கள், குறிஞ்சி உள்பட ஏராளமான மலர் செடிகள் ஒவ்வொரு காலக்கட்டங்களில் நிலவும் காலநிலைக்கு ஏற்ப மலருகிறது. இதனை சுற்றுலா பயணிகள் கண்டு ரசிப்பது வழக்கம்.

கூடலூர் பகுதியில் தற்போது 2 வகையான காட்டு சூரிய காந்தி மலர்கள் பூத்து குலுங்குகிறது. இதில் கோக்கால் , ஓவேலி பார்வுட் , கூடலூர்– ஊட்டி மலைப்பாதை, சேரம்பாடி உள்ளிட்ட வனப்பகுதியில் மஞ்சள் நிற சூரிய காந்தி மலர்கள் பூத்து குலுங்குகிறது. நெலாக்கோட்டை , பிதிர்காடு, பெண்ணை வனப்பகுதியில் வெள்ளை நிற காட்டு சூரிய காந்தி மலர்கள் பூத்துள்ளது.

இதனை சுற்றுலா பயணிகள் மட்டுமின்றி உள்ளூர் மக்களும் வெகுவாக கண்டு ரசித்து வருகின்றனர்.

<u>சுற்றுலா பயணிகள் ரசிப்பு</u>

மாத தொடக்கத்தில் பூக்க தொடங்கிய இம்மலர்கள் சில வாரங்களாக வாடாமல் காணப்படுகிறது. மேலும் தற்போது கோடை வெயில் சுட்டெரித்து வருகின்ற நிலையில் சூரியகாந்தி மலர்கள் வாடாமல் கண்ணுக்கு ரம்மியமாகவும் , மனதை மிகவும் கவருவதாக சுற்றுலா பயணிகள் மகிழ்ச்சியுடன் ரசித்து வருகின்றனர்.

இதுகுறித்து இயற்கை ஆர்வலர்கள் கூறும்போது , கூடலூர் வனப்பகுதியில் இயற்கையாக பூக்கக்கூடிய மலர்கள் அதிகளவு உள்ளது. இதேபோல் காட்டு இஞ்சி, வாழை உள்ளிட்ட தாவரங்களும் வளருகிறது. இதுதவிர பெரணி செடிகள், மூங்கில்கள், ஆர்க்கிட் மலர்கள் , மூலிகைகள் என அரியவகை செடிகள் உள்ளது. ஆனால் கோடை காலங்களில் வனத்துக்கு தீ வைப்பதால் அவைகள் அழிந்து வருகிறது. இதனால் வனப்பகுதிக்கு தீ வைக்காமல் இருந்தால் அரியவகை தாவரங்களை அழியாமல் பாதுகாக்கப்படும். இதற்கு பொதுமக்கள் ஒத்துழைப்பு இருந்தால் மட்டுமே முடியும் என்றனர்.

## <u>121–வது மலர் கண்காட்சியை முன்னிட்டு ஊட்டி , தாவரவியல் பூங்காவில் 5 லட்சம் மலர் செடிகள் நடவு செய்யும் பணி தொடங்கியது</u>



ஊட்டி,

ஊட்டி தாவரவியல் பூங்காவில் மே மாதம் நடைபெறும் 121–வது மலர் கண்காட்சியை முன்னிட்டு 5 லட்சம் மலர் செடிகள் நடவு செய்யும் பணி நேற்று தொடங்கியது. இந்த ஆண்டு 60 புதிய ரக மலர்செடிகள் அறிமுகப்படுத்தப்பட்டு உள்ளது.

மலர்கண்காட்சி

ஒவ்வொரு ஆண்டும் ஊட்டி அரசு தாவரவியல் பூங்காவில் மே மாதம் வரும் சுற்றுலா பயணிகளை மகிழ்விக்க மலர்கண்காட்சி நடைபெறுவது வழக்கம். இந்த கண்காட்சியை உலகம் முழுவதும் உள்ள சுற்றுலா பயணிகள் கண்டு ரசித்து செல்வார்கள்.

மேலும் சுற்றுலா பயணிகளை மகிழ்விக்க பூங்கா முழுவதும் பல்வேறு வகையான மலர்செடிகள் நடவு செய்யப்பட்டு இருக்கும். இந்த மலர்செடிகள் ஏப்ரல், மே மாதங்களில் பூத்து குலுங்கும். இதனை காண நாள்தோறும் ஆயிரக்கணக்கான சுற்றுலா பயணிகள் ஊட்டியில் குவிவார்கள்.

கண்ணாடி மாளிகை

இந்த பூங்காவில் 2 கண்ணாடி மாளிகை அமைக்கப்பட்டு உள்ளது. இந்த கண்ணாடி மாளிகையில் கட்டுப்படுத்தப்பட்ட வெப்ப நிலையில் வளரக்கூடிய மலர்செடிகள் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டு வளர்க்கப்பட்டு வருகிறது.

ஊட்டியில் ஆண்டுதோறும் மார்ச், ஏப்ரல், மே மாதங்கள் கோடை சீசன் காலம் ஆகும். இந்த சீசன் காலங்களில் தினமும் ஆயிரக்கணக்கான சுற்றுலா பயணிகள் வருகின்றனர். 2–வது சீசன் அக்டோபர் , நவம்பர் மாதங்களாகும். நவம்பர், டிசம்பர் மாதம் பனி குளிர் சீசன் ஆகும். இது போன்ற சீசன் காலத்தை அனுபவிக்க நீலகிரி மாவட்டத்திற்கு ஆண்டுக்கு 22 லட்சத்திற்கும் மேற்பட்ட உள்ளூர் மற்றும் வெளிநாடுகளில் இருந்து சுற்றுலா பயணிகள் வருகிறார்கள். இதன் மூலம் பல கோடி ரூபாய் வருமானம் வருகிறது.

5 லட்சம் மலர் செடிகள் நடவு

ஊட்டி தாவரவியல் பூங்காவில் மே மாதம் நடைபெறும் 121–வது மலர் கண்காட்சியையொட்டி 5 லட்சம் மலர் செடிகள் நடவு செய்யும் பணி நேற்று காலை நடைபெற்றது. இதில், மாவட்ட கலெக்டர் சங்கர் கலந்து கொண்டு மலர் செடிகள் நடவு செய்யும் பணியை தொடங்கி வைத்தார். பின்னர் இதுகுறித்து அவர் மேலும் கூறியதாவது:–

சுற்றுலா பயணிகளை கவரும் வகையில் அமெரிக்கா , ஜப்பான், ஜெர்மனி மற்றும் நெதர்லாந்து ஆகிய நாடுகளில் இருந்து இன்கா மேரிகோல்டு , பிகோனியா, கேன்டீடப்ட், டெல்பீனியம், பிரன்ச் மேரிகோல்டு , சின்ரேரியா, வெர்பினா, சன்பிளவர், ஆன்டிரைனம், வயோலா போன்ற 200 வகையான

மலர் செடிகளின் விதைகள் பெறப்பட்டு மலர் செடிகள் உற்பத்தி செய்யப்பட்டு உள்ளன.

இந்த மலர் செடிகள் பூங்காவின் பல்வேறு பகுதிகளில் நடவு செய்யப்படும். வருகிற மே மாதம் நடைபெறும் 121–வது மலர் கண்காட்சியின் போது பல்வேறு வண்ணங்களில் இந்த மலர் செடிகள் பூத்து குலுங்கும்.

<u>புதிய ரக மலர் செடிகள்</u>

ஊட்டி தாவரவியல் பூங்காவில் இந்த ஆண்டு சிறப்பு அம்சமாக ஓரியண்டல் லில்லி, ஆசியாடிக் லில்லி, பேன்சி, பெட்டுனியா, பிளாக்ஸ், பிரிமுலா, ஜினியா, ஸ்டாக் கேல் உள்ளிட்ட 60 புதிய ரக மலர் செடிகள் அறிமுகப்படுத்தப்பட்டு உள்ளது. இதேபோல் இத்தாலியில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டு தும்மனட்டி அரசு தோட்டக்கலைப்பண்ணையில் உற்பத்தி செய்யப்பட்ட 5 ரக கார்னேசன் மலர் செடிகள் சுற்றுலா பயணிகள் பார்வைக்கு வைக்கப்படும். இதுதவிர இந்த ஆண்டு நடைபெறும் மலர் கண்காட்சியின் போது பல்வேறு வண்ணங்களில் பூக்கும் 15 ஆயிரம் மலர் செடிகள் தாவரவியல் பூங்காவில் அடுக்கி வைக்கப்படும். இவ்வாறு அவர் கூறினார்.

இந்த நிகழ்ச்சியில் தோட்டக்கலை துறை இயக்குனர் மணி , பூங்கா உதவி இயக்குனர் சிபிலா மேரி , பூங்கா மேலாளர் வித்யா உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## சேலம் மாவட்டத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட பயிர்சேதம் குறித்த கணக்கெடுப்பு இன்று தொடங்குகிறது



சேலம்,

சேலம் மாவட்டத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட பயிர்சேதம் குறித்த கணக்கெடுப்பு பணி இன்று தொடங்குகிறது.

வறட்சியால் பாதிப்பு

சேலம் மாவட்டத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட பயிர்சேதம் கணக்கெடுப்பது குறித்து அலுவலர்களுடன் ஆலோசனை கூட்டம் கலெக்டர் அலுவலகத்தில் நேற்று நடந்தது. கூட்டத்துக்கு மாவட்ட கலெக்டர் சம்பத் தலைமை தாங்கினார். மாவட்ட வருவாய் அலுவலர் சுகுமார் , வேளாண்மை இணை இயக்குனர் சவுந்தரராஜன் , கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் ராஜேந்திரபிரசாத், தோட்டக்கலை துணை இயக்குனர் பிரபு ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் கலெக்டர் சம்பத் கூறியதாவது:- கடந்த ஆண்டு வடகிழக்கு பருவமழை பொய்த்ததால் தமிழக அரசு உத்தரவின்பேரில் சேலம் மாவட்டத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட பயிர்சேதம் கணக்கெடுக்கும் பணி இன்று (வியாழக்கிழமை) தொடங்கப்பட உள்ளது. இந்த பணி மாவட்டத்தில் உள்ள 20 ஊராட்சி ஒன்றியங்களிலும் நடைபெற உள்ளது. இந்த கணக்கெடுப்பு பணியினை மேற்கொள்ள மண்டல துணை தாசில்தார் , வருவாய் ஆய்வாளர் , கிராம நிர்வாக அலுவலர் , வேளாண்மைத்துறை அலுவலர் , தோட்டக்கலைத்துறை அதிகாரிகள் மற்றும் அரசு அலுவலர்கள் நியமிக்கப்பட்டு உள்ளனர்.

சரியான முறையில் கணக்கீடு

மாவட்டத்தில் இப்பணியை மேற்கொள்ள அலுவலர்களுக்கு ஒவ்வொரு பகுதியிலும் விவசாய நிலங்களின் அளவினை சரியான முறையில் கணக்கீடு செய்வதன் அவசியத்தை எடுத்துரைக்கப்பட்டு உள்ளது. தளஆய்வு செய்யப்படும் பயிர்சேத புலத்தினை புகைப்படம் எடுத்திடவும் , அதனை ஆவணமாக பதிவுசெய்து தொடர்புடைய அலுவலர்களுக்கு அனுப்பும் முறைகள் குறித்தும் அலுவலர்களுக்கு உரிய பயிற்சி அளிக்கப்பட்டு உள்ளது. குறிப்பாக பாதிக்கப்பட்ட விவசாயிகள் அனைவருக்கும் நிவாரணம் கிடைக்கும் வகையில் அலுவலர்கள் தங்கள் பணியினை முழுமையாக செயல்படுத்தப்பட வேண்டும். இவ்வாறு கலெக்டர் கூறினார்.

கூட்டத்தில் மாவட்ட கலெக்டரின் நேர்முக உதவியாளர் தமிழ்ராஜன் , மாவட்ட வழங்கல் அலுவலர் ராமதுரை முருகன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## மாவட்டம் முழுவதும் வறட்சி பாதிப்பு குறித்து கணக்கெடுப்பு பணி கலெக்டர் உத்தரவு



தேனி,

தேனி மாவட்டம் முழுவதும் வறட்சி பாதிப்பு குறித்து கணக்கெடுப்பு பணி மேற்கொள்ள மாவட்ட கலெக்டர் வெங்கடாசலம் உத்தரவிட்டு உள்ளார்.

<u>வறட்சி பாதிப்பு</u>

தேனி மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் , பயிர் பாதிப்பு தொடர்பான கணக்கீடு செய்யும் பணிகள் குறித்த ஆலோசனை கூட்டம் நேற்று நடந்தது. கூட்டத்திற்கு மாவட்ட கலெக்டர் வெங்கடாசலம் தலைமை தாங்கினார். இதில் , வருவாய்த்துறை, வேளாண்மைத்துறை, தோட்டக்கலைத்துறை, புள்ளியியல் துறை, ஊராட்சி, பேரூராட்சி, நகராட்சி அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் மாவட்ட கலெக்டர் வெங்கடாசலம் பேசும் போது கூறியதாவது:–

தேனி மாவட்டத்தில் பருவ மழை , இயல்பான மழை அளவை விட குறைவாக பெய்துள்ளது. இதனால், பயிர் பாதிப்பு விவரங்களை கணக்கீடு செய்வதற்காக வருவாய்த்துறை, வேளாண்மைத்துறை, தோட்டக்கலைத்துறை மற்றும் புள்ளியியல் துறை அலுவலர்கள் ஒருங்கிணைந்து விவசாய நிலங்களுக்கு நேரடியாக சென்று ஆய்வு செய்ய வேண்டும். வருவாய்த்துறை மற்றும் வேளாண்மைத்துறை அலுவலர்கள் பயிர் பாதிப்பு உள்ள ஒவ்வொரு வட்டத்திற்கு உட்பட்ட குறிப்பிட்ட கிராமங்களை தேர்வு செய்து , பாதிக்கப்பட்ட முக்கிய பயிர்களில் ஒவ்வொரு பயிர் விவரத்திற்கும் குறைந்தது 7 இடங்களை ஆய்வு செய்து அதற்கான சான்றாக புகைப்படம் எடுத்து புவன் என்ற கணினி பக்கத்தில் பதிவேற்றம் செய்ய வேண்டும்.

முன்னேற்ற அறிக்கை

கிராம அலுவலர்கள் ஒவ்வொரு கிராமத்திற்கும் அடங்கல் பதிவேடு பராமரிக்கப்படுவதை போன்று வேளாண்மைத்துறை அலுவலர்கள் அடங்கல் பதிவேட்டினை ஒவ்வொரு கிராமத்திற்கும் பராமரிக்க வேண்டும். பயிர் பாதிப்படைந்த பகுதிகளை கணக்கெடுப்பதற்கு தாலுகா வாரியாக அதிகாரிகள் நியமிக்கப்பட்டு உள்ளனர்.

இந்த கணக்கெடுப்பு பணிகளை எவ்வித சுணக்கமும் இன்றி மேற்கொள்ள களப்பணி அலுவலர்களுக்கு கூட்டம் நடத்த வேண்டும். அரசுக்கு இப்பணி தொடர்பாக முன்னேற்ற அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டியுள்ளதால் பயிர் பாதிப்பு விவரங்களை எவ்வித தொய்வுமின்றி , கவனமாக மேற்கொள்ள வேண்டும்.

இவ்வாறு கலெக்டர் வெங்கடாசலம் பேசினார்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் பொன்னம்மாள் , வேளாண்மைத்துறை இணை இயக்குனர் மூர்த்தி , தோட்டக்கலைத்துறை துணை இயக்குனர் கிஷோர்குமார் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

## விளாத்திகுளம் அருகே மிளகாய், மல்லி சாகுபடி தொழில்நுட்ப பயிலரங்கம்




விளாத்திகுளம்,

விளாத்திகுளம் அருகே மிளகாய் , மல்லி தொழில்நுட்ப பயிலரங்கம் நடந்து.

விளாத்திகுளம் விடியல் டிரஸ்ட் சார்பில் மிளகாய், மல்லி சாகுபடி தொழில்நுட்ப பயிலரங்கம் குறளயம்பட்டி அருகே வேம்பார் சாலையில் உள்ள ரோஸ்லின்ட் சாந்தி தோட்ட பண்ணையில் செயல்பட்டு வரும் விளாத்திகுளம் வேளாண் உற்பத்தியாளர் கம்பெனியின் பயிற்சி மையத்தில் நடந்தது.

**விவசாயிகள் பங்கேற்பு**

நபார்டு வங்கியின் சாகுபடி தொழில்நுட்ப மேம்பாட்டு திட்டத்தின் கீழ் இப்பயிற்சியில் உழவர் ஆர்வலர் குழு, பெண்கள் சுய உதவிக்குழு கூட்டமைப்பு உறுப்பினர்கள், வேளாண் உற்பத்தியாளர் கம்பெனி இயக்குனர்கள் உள்ளிட்ட திரளான விவசாயிகள் கலந்து கொண்டனர்.

பயிற்சி வகுப்புகளை நபார்டு வங்கி பொதுமேலாளர் செல்லத்துரை தொடங்கி வைத்தார். நபார்டு வங்கி மாவட்ட வளர்ச்சி மேலாளர் விஜயபாண்டியன் , பயிற்சியின் நோக்கங்களை விளக்கிப் பேசினார்.

**பங்கேற்றோர்**

விருதுநகர் ஜேப்பி பண்ணை இயக்குனர் பழனீஸ்வர் மிளகாய் , மல்லி மானாவாரி சாகுபடி தொழில்நுட்பங்களை விவரித்தார். நிகழ்ச்சிக்கு விடியல் டிரஸ்ட் நிறுவனர் டாக்டர் ஜோதிமணி தலைமை தாங்கினார். விடியல் டிரஸ்ட் ஆலோசகர் பால்ராஜ் முன்னிலை வகித்தார். சிறப்பு விருந்தினராக சென்னை பல் மருத்துவ மைய இயக்குனர் டாக்டர் ரிச்சர்ட்ஸ் கலந்து கொண்டார். முன்னதாக, விடியல் டிரஸ்ட் திட்ட மேலாளர் குமாரவேலு வரவேற்று பேசினார். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை விளாத்திகுளம் அரசு மேல்நிலைப்பள்ளிக்கூட தலைமை ஆசிரியை ரோஸ்லிண்ட் சாந்தி வழிகாட்டுதல்படி விடியல் பணியாளர்கள் தாமஸ்கிங் , மெசியா, கணேசன், திருச்செல்வேந்திரன், முத்துராமலிங்கம், முரட்டுக்காளை ஆகியோர் செய்திருந்தனர்.

## தினகரன்

**24லட்சத்துக்கு பஞ்சு மூட்டை கொள்முதல்**

கள்ளக்குறிச்சி: கள்ளக்குறிச்சி வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் ரூ. 24 லட்சத்திற்கு பஞ்சு மூட்டை கொள்முதல் செய்யப்பட்டது. கள்ளக்குறிச்சி பருத்தி சந்தைக்கு கடலூர், விழுப்புரம், சேலம் உள்பட பல்வேறு மாவட்டங்களில் இருந்து விவசாயிகள் பஞ்சுமூட்டைகளை விற்பனைக்கு கொண்டு வருகின்றனர். அதில் நேற்று 149 விவசாயிகள், 1010 பஞ்சுமூட்டைகளை விற்பனைக்கு கொண்டு வந்திருந்தனர். இதனை திருப்பூர் ,

அன்னூர், சத்தியமங்கலம், புஞ்சைபுளியம்பட்டி, மகுடஞ்சாவடி, கொங்கனாபுரம் உள்ளிட்ட பகுதிகளில் இருந்துவந்த வியாபாரிகள் ஏலத்தில் எடுத்து சென்றனர். கடந்த வாரத்தை விட இந்தவாரம் பஞ்சுமூட்டை வரத்து அதிகமாக இருந்தது.எல்ஆர்ஏ பருத்தி ரகம் ஒரு குவிண்டால் குறைந்தபட்ச விலை ரூ. 5124, அதிகபட்ச விலை ரூ. 5719, சுவின் குறைந்தபட்ச விலை ரூ.6410, அதிகபட்ச விலை ரூ. 6670-க்கும் கொள்முதல் செய்யப்பட்டது. மொத்தத்தில் 1010 பஞ்சுமூட்டைகளும் ரூ. 24 லட்சத்திற்கு கொள்முதல் செய்யப்பட்டதாக கள்ளக்குறிச்சி வேளாண்மை இயக்குநர் தெரிவித்தார்.

**டெல்டா மாவட்டங்களை தொடர்ந்து விழுப்புரம் மாவட்டத்தில் காய்ந்து கருகும் பயிர்கள்**

விழுப்புரம் : டெல்டா மாவட்டங்களை தொடர்ந்து விழுப்புரம் மாவட்டத்திலும் கடும் வறட்சி காரணமாக 1000 ஏக்கருக்கு மேல் நெல், கரும்பு பயிர்கள் கருகியுள்ளது. தினம் ஒரு விவசாயிகள் செத்து மடிகிறார்கள். தமிழகத்தில் பருவமழையின் அளவு ஆண்டுதோறும் குறைந்துகொண்டு வருவதால் கடும் வறட்சியின் பிடியில் விவசாயம் உள்ளது. டெல்லா மாவட்டங்களில் கடும் வறட்சியால் நஷ்டத்தை சமாளிக்கமுடியாமல் விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்பட்டு விவசாயிகள் அதிர்ச்சியிலும் , தற்கொலையிலும் ஈடுபட்டு வருகின்றனர். டெல்டா மாவட்டங்களை தொடர்ந்து தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களிலும் இந்த நிலை நீடித்து வருகிறது. தமிழகத்தின் உள் மாவட்டங்களான விழுப்புரம் , கடலூர், திருவண்ணாமலை, வேலூர் உள்ளிட்ட மாவட்டங்களில் நிலத்தடி நீரை நம்பியே பாசனம் செய்யப்பட்டு வருகிறது. விழுப்புரம் மாவட்டம் விவசாயிகள் நிறைந்த மாவட்டம். அதற்கேற்ற விவசாய தொழிலாளர்களும் அதிகளவு உள்ளனர்.

கரும்பு, நெல் சாகுபடி அதிகளவு உள்ளது. குறைந்தது ஆண்டுக்கு 3 லட்சம் ஹெக்ேடரில் கரும்பு , நெல்சாகுபடி செய்யப்படுவதை வழக்கமாக கொண்டுள்ளனர். மோட்டார் மூலம் பெரும்பாலான விவசாயிகள் நீர்பாசனம் செய்து வந்தனர்.

தற்போது விழுப்புரம் சுற்றுவட்டாரப்பகுதியான கொண்டங்கி , கப்பூர், தோகைப்பாடி, வேடம்பட்டு உள்ளிட்ட 20க்கும் மேற்பட்ட கிராமங்களில் நிலத்தடிநீர்மட்டமும் குறைந்து விட்டது.

கொண்டங்கி கிராமத்தை சேர்ந்த குமாரசாமி என்பவருக்கு சொந்தமான 4 ஏக்கர் நெற்பயிர்கள் காய்ந்து கருகியுள்ளது. அதே போல் தனபால் என்பவரது 3 ஏக்கர் நெற்பயிரும் பொங்கலுக்கு அறுவடைக்குதயராக இருந்தநிலையில் நெல்முளைப்புவிடும் நிலையில் தண்ணீர்பாசனமின்றி காய்ந்துகருகியுள்ளது.

இதே போல் மாவட்டத்தின் பல பகுதியிலும் 500 ஏக்கருக்கும் மேல் நெற்பயிர்கள் காய்ந்து கருகியுள்ளன.நெல் பயிருக்கு அடுத்தபடியாக கரும்பு பயிர்களும் போதிய நீர்பாசனமின்றி காய்ந்து கருகிவருகிறது. வாரம் ஒருமுறை தண்ணீர் பாசனம் செய்ய வேண்டிய கரும்புக்கு மாதம் ஒரு முறை என்பதே கேள்விக்குறியாக உள்ளது. இதனால் கரும்பு நடவு செய்த விவசாயிகளும் என்ன செய்வது என்று தெரியாமல் திகைத்துள்ளனர். உரவிலை உயர்வு , பணத்தட்டுப்பாடு போன்ற கஷ்ட நேரத்தில் விவசாயம் செய்தாலும் வறட்சியால் அனைத்தும் பொசுங்கிவிட்டதாக

விவசாயிகள் புலம்பிவருகின்றனர். பொறுத்துக்கொள்ளமுடியாத விவசாயிகள் தினமும் தற்கொலை முடிவில் ஈடுபட்டு வருவது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. விவசாயிகள் மரணத்தை தடுக்க வேண்டிய தமிழகஅரசும்

கண்டு கொள்ளாமல் இருப்பது பொதுமக்களிடையே பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது.

வறட்சி நிவாரணம் வழங்க வேண்டும் கொண்டங்கி கிராமத்தைச் சேர்ந்த விவசாயி குமாரசாமி கூறுகையில் , எனக்கு சொந்தமாக 4 ஏக்கரில் நெல் பயிரிட்டிருந்தேன். ஒரு ஏக்கருக்கு ரூ.20 ஆயிரம் செலவு ஏற்பட்டது. கூட்டுறவு வங்கியில் ரூ. 1 லட்சம் கடன்வாங்கி பயிர்சாகுபடி செய்தேன். தற்போது பொங்கலுக்கு அறுவடை செய்ய வேண்டும். ஆனால் தண்ணீர் இன்றி பயிர்கள் காய்ந்து கருகிவருகின்றன. செலவு செய்த பணமாவது கிடைக்கும் என்று எதிர்பார்த்தேன். ஆனால் அது பொய்த்து விட்டது. எனவே கடன் தொகையை தள்ளுபடி செய்து , வறட்சி நிவாரணம் வழங்கினால்தான் எங்களால் மீளமுடியும். இல்லையென்றால் விபரீதமான முடிவைதான் எடுப்போம் என்றார்.

மணல் கொள்ளையால் நிலத்தடி நீர் போச்சு விழுப்புரம் மாவட்டத்திற்கு நீர் ஆதாரமாக விளங்குவது தென்பெண்ணையாறு. கடந்த 5 ஆண்டுகளுக்கு மேலாக அரசு விதிகளை மீறி 3 அடிக்கும் கீழ் மணல் தரையளவு சுரண்டப்பட்டுள்ளது. இதனால் நிலத்தடிநீர் குறைந்து விவசாயம் , குடிநீர் பாதிக்கும் என்று விவசாயிகளும் , பொதுமக்களும் பல்வேறு போராட்டங்கள் நடத்தியும் , ஆட்சியரிடமும் மனு கொடுத்தனர். அப்போது அதிகாரிகள் நடவடிக்கை எடுக்காததால் இன்று பயிர்கள் காய்ந்து கருகுவதால் விவசாயிகள் செத்து மடிகின்றனர். இன்னும் சில காலங்களில் குடிநீருக்கும் கடும் பஞ்சம் ஏற்படும்.

விழுப்புரம் மாவட்டத்தில் தொடரும் மரணங்கள் விழுப்புரம் மாவட்டத்தில் தேவதானம்பேட்டையை சேர்ந்த விஜயராகவன் என்ற விவசாயி மூன்றரை ஏக்கர் குத்தகைக்கு எடுத்து நெல்பயிர் செய்திருந்தார். வறட்சியால் ,

நீர்பாசனமின்றி பயிர் கருகியதால் தூக்குபோட்டு தற்கொலை செய்துகொண்டார். அதனைத்தொடர்ந்து நேற்று ஒரு விவசாயி அதிர்ச்சியில் இறந்துள்ளார். விழுப்புரம் அடுத்துள்ள அதனூரைச் சேர்ந்த மகாதேவன்(54) என்ற விவசாயி கரும்பு வயலுக்கு சென்றபோது காய்ந்து கருகியிருந்ததை பார்த்து அதிர்ச்சியில் இறந்துள்ளார். இப்படி தினம் ஒரு விவசாயிகள் மரணம் விழுப்புரம் மாவட்டத்திலும் தொடர்கிறது.

**வேலூரில் முல்லை, மல்லி கிலோ 1100க்கு விற்பனை பொதுமக்கள் அதிர்ச்சி**

வேலூர்: வேலூர் மாவட்டத்தில் முல்லை , மல்லி பூ சீசன் முடிந்ததால் மார்க்கெட்டுக்கு வருவதில்லை. இதனால் உழவர் சந்தைக்கு வரும் குறைந்த பூக்கள் கிலோ 1100க்கு விற்பனை செய்யப்படுகிறது.

வேலூர் மாவட்டத்தில் காட்பாடி , அணைக்கட்டு, லத்தேரி, கே.வி.குப்பம், ஒடுகத்தூர், ஆம்பூர் போன்ற பல்வேறு பகுதிளில் உள்ள விவசாயிகள் முல்லை , மல்லி பூக்கள் அதிகளவில் பயிரிடுகின்றனர். அங்கு பயிரிடப்படும் பூக்களை விற்பனைக்காக வேலூர் நேதாஜி மார்க்கெட் , உழவர் சந்தைகள் மற்றும் சென்னைக்கு கொண்டு செல்லப்படுகிறது.
இந்நிலையில் முல்லை, மல்லி பூக்கள் வரத்து ஜூலை மாதம் தொடங்கி டிசம்பர் வரையில் இருக்கும். அதன்பின்னர் படிப்படியாக வரத்து குறைந்துவிடும். தற்போது சீசன் முடிந்துவிட்டதால் ஒரு சில இடங்களில் மட்டுமே பூக்கள் வரத்து குறைந்தளவில் உள்ளது.
வேலூர் நேதாஜி மார்க்கெட்டுக்கு முல்லை , மல்லி வரத்து அடியோடு நின்றுள்ளது. வேலூரில் உள்ள உழவர் சந்தைகளில் மட்டும் நேற்று குறைந்தளவில் முல்லை, மல்லி விற்பனைக்கு வந்தது. இந்த பூக்கள் ஒரு கிலோ

1100க்கு விற்பனை செய்யப்பட்டது. என்றாலும் சிலமணி நேரங்களில் இவை அனைத்தும் விற்று தீர்ந்துவிட்டது. இந்த விலை உயர்வால் பெண்கள் கடும் அதிர்ச்சி அடைந்தனர்.

இதுகுறித்து பூ வியாபாரிகள் கூறுகையில் , 'வேலூர் மாவட்டத்தில் தற்போது முல்லை, மல்லி சீசன் முடிந்துவிட்டது. ஒரு சில இடங்களில் இருந்து குறைந்த அளவில் பூக்கள் விற்பனைக்கு வருகிறது. இதனால் விலை கடுமையாக உயர்ந்துள்ளது. இன்னும் சில நாட்கள் சென்றால் இந்த பூக்களும் விற்பனைக்கு வராது. மீண்டும் சீசன் தொடங்கி வரத்து அதிகரித்தால்தான் இந்த விலை குறையும்' என்றனர்.

**வாழை, மிளகாய் காப்பீடு செய்ய ஜன.15 கடைசி நாள்**

சிவகங்கை: சிவகங்கை மாவட்டத்தில் வாழை , மிளகாய் பயிர்களுக்கு காப்பீடு செய்ய ஜன. 15ம் தேதி கடைசி நாள் என அறிவிக்கப்பட்டுள்ளது.சிவகங்கை தோட்டக்கலை துணை இயக்குநர் ராஜேந்திரன் கூறியதாவது: மாவட்டத்தில் ஆண்டுதோறும் சராசரியாக 880 ஹெக்டேர் பரப்பில் வாழைப்பயிரும் , 4 ஆயிரத்து 300 ஹெக்டேர் பரப்பில் மிளகாய் பயிரும் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. வறட்சி , வெள்ளம், நோய் தாக்குதல் போன்றவைகளால் பாதிக்கப்பட்டு பயிர் விளைச்சல் குறையும்போது , ஏற்படும் இழப்பை ஈடுகட்ட காப்பீட்டுத் திட்டத்தின் மூலமாக பயிர் காப்பீடு செய்யப்படுகிறது.

இந்த ஆண்டு ராபி பருவத்தில் பயிரிடப்பட்டுள்ள வாழை மற்றும் மிளகாய் பயிர்களுக்கு காப்பீடு செய்யலாம். தற்போது , வாழைப் பயிர்களுக்கு சிவகங்கை, இளையான்குடி, மானாமதுரை, திருப்புவனம் ஆகிய வட்டாரங்களிலும் 8 பிர்க்காக்களிலும், மிளகாய் பயிருக்கு இளையான்குடி , திருப்புவனம் ஆகிய வட்டாரங்களிலும் கிராம வாரியாக பயிர் காப்பீடு

செய்யப்பட உள்ளது. வாழைப் பயிருக்கு ஒரு ஏக்கருக்கு அதிகபட்ச இழப்பீடாக ரூ.35 ஆயிரம் வழங்கப்படும். இதற்கு பிரீமியமாக மத்திய , மாநில அரசு மானியம் போக ரூ.1,750 செலுத்த வேண்டும். மிளகாய் பயிருக்கு ஓர் ஏக்கருக்கு அதிகபட்சமாக ரூ.18 ஆயிரம் இழப்பீடு வழங்கப்படும். இதற்கு மானியம் போக பிரீமியமாக ஒரு ஏக்கருக்கு ரூ. 900- செலுத்த வேண்டும். காப்பீடு செய்ய ஜன.15ம் தேதி கடைசி நாள். காப்பீடு செய்ய விரும்பும் விவசாயிகள் தாங்கள் கணக்கு வைத்துள்ள தேசியமயமாக்கப்பட்ட வங்கி அல்லது தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கிகளின் மூலமாக பிரீமியத் தொகையைச் செலுத்தலாம். அவ்வாறு செலுத்தும்போது , பயிர் செய்துள்ளதற்கான ஆதாரத்தையும் சமர்ப்பிக்க வேண்டும். இது குறித்த கூடுதல் விவரங்களைத் தங்கள் பகுதி வட்டார தோட்டக்கலைத்துறை அலுவலகங்களில் அறிந்து கொள்ளலாம். இவ்வாறு கூறினார்.

## பருவமழை பொய்த்ததால் வறண்டது திருமுக்குளம் திருவில்லிபுத்தூரில் நிலத்தடிநீர் குறையும் அபாயம்

திருவில்லிபுத்தூர்: மழை இல்லாததால் திருவில்லிபுத்தூர் நகர் மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் உள்ள குளங்கள் மற்றும் கண்மாய்கள் வறண்டு வருவதால் நிலத்தடி நீர்மட்டம் குறையும் அபாயம் நிலவுகிறது.திருவில்லிபுத்தூர் நகர் மற்றும் சுற்றுவட்டார பகுதியில் சிறிதும் , பெரியதுமாக சுமார் 200க்கும் மேற்பட்ட கண்மாய்கள் மற்றும் குளங்கள் உள்ளன. போதிய மழை இல்லாததால் கண்மாய் மற்றும் குளங்கள் காணப்படுகின்றன. குறிப்பாக திருவில்லிபுத்தூர் ஆண்டாள் கோயிலுக்கு சொந்தமான திருமுக்குளம் மற்றும் விருதுநகர் மாவட்டத்திலேயே மிக பெரிய கண்மாயான திருவில்லிபுத்தூர் பெரியகுளம் கண்மாய் போன்றவைகள் வறண்டு உள்ளன.திருமுக்குளத்திலும் , பெரியகுளத்திலும் தண்ணீர் இருந்தால் நகரில் நிலத்தடி நீர்மட்டம் உயரும். தற்போது தண்ணீர் இல்லாததால் நிலத்தடி

நீர் மட்டம் மிகவும் குறைந்துள்ளது.இந்த குளம் , கண்மாயில் தண்ணீர் நிரம்பி இருக்கும் காலங்களில் போர்வெல்களில் நீர் அதிகமாக இருக்கும். வீடுகளிலுள்ள மின்மோட்டாரை இயக்கினால் தண்ணீர் தொட்டி வேகமாக நிரம்பி விடும். நிலத்தடி நீர்மட்டம் சரிந்துள்ளதால் தண்ணீர் தொட்டிய நிரம்ப நீண்டநேரமாகிறது.

## வைகுண்டம் அருகே வேளாண் இயந்திரங்கள் கருவிகள் வாடகை மையம் திறப்பு

வைகுண்டம்: 鎖 வைகுண்டம் அருகே பொட்டல் கிராமத்தில் வேளாண்மை இயந்திரங்கள் மற்றும் கருவிகள் வாடகை மையம் திறப்பு விழா நடந்தது. வேளாண் தொழிலாளர்கள் பற்றாக்குறையால் விவசாயிகள் வேளாண் பணிகளை உரிய காலத்தில் மேற்கொள்ள முடியாத நிலை உள்ளது. இந்நிலையில், குறைந்த அளவு நிலம் வைத்திருக்கும் விவசாயிகள் அதிக விலையுள்ள விலையுள்ள வேளாண் இயந்திரங்களை விவசாயிகளுக்கு குறைந்த வாடகைக்கு வழங்க அரசு திட்டமிடப்பட்டுள்ளது.

இது தமிழக அரசின் வேளாண்மை பொறியியல் துறை மூலம் அனைத்து தரப்பு விவசாயிகளும் பயனடையும் வகையில் வேளாண்மை இயந்திரமயமாக்கும் துணை இயக்கம் மற்றும் தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படுகிறது.
உயர் தொழில்நுட்பத்துடன் உயர் திறனுள்ள வேளாண் இயந்திரங்கள் மறறும் வேளாண் கருவிகளை வாடகைக்கு அமைக்க முன்வரும் தொழில் முனைவோர் , விவசாய சங்கங்கள் மற்றும் முன்னோடி விவசாயி களுக்கு வேளாண்மை இயந்திர மயமாக்கும் திட்டத்தின் கீழ் 40 சதவீத மானியம் வழங்கப்படுகிறது.

இதன்படி, ரூ.25 லட்சம் மதிப்பிலான வேளாண்மை இயந்திரங்கள் மற்றும் கருவிகளை வாங்கி வாடகை மையம் அமைப்பதற்கு அதிகபட்ச மானியமாக ரூ.10 லட்சம் வழங்கப்படுகிறது. நடப்பு நிதியாணடில் மொத்தம் 13 வாடகை மையம் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

இதில், 9வது வாடகை மைய திறப்பு விழா 鐠வைகுண்டம் அருகே பொட்டல் கிராமத்தில் நேற்று நடந்தது. சிவகளையை சேர்ந்த முன்னோடி விவசாயி மற்றும் தொழில் முனைவோருமான அருணாசலம் மூலம் அமைக்கப்பட்டுள்ள வாடகை மையத்தை வேளாண்மை பொறியியல் துறை கண்ணாணிப்பு பொறியாளர் பாலசந்திரன் திறந்து வைத்தார். வேளாண்மை பொறியியல் துறை செயற் பொறியாளர் கலைச் செல்வன் , உதவி செயற் பொறியாளர் ஜாகீர் உசேன், இளநிலைப் பொறியாளர்கள் வெள்ளைச்சாமி , சண்முகம், தமிழ்நாடு மெர்க்கன்டைல் வங்கி பண்டாரவிளை கிளை மேலாளர் சரவணன், பாண்டியன் வங்கி சிவகளை கிளை மேலாளர் ராஜா, விவசாய சங்கத் தலைவர் மதிவாணன், முன்னாள் ஊராட்சி தலைவர் ஜட்சன் , சிவகளை விவசாய சங்க செயலாளர் வீரமுத்து, முன்னோடி விவசாயிகள் மாங்கொட்டாபுரம் ராஜேந்திரன் , சம்பத், செல்வராஜ், சாமியாத்து அண்ணாதுரை , பொட்டல் ஊராட்சி எழுத்தர் கொத்தாளமுத்து உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## பெரிய ஏரி வடிகால் வாய்க்கால் தூர்வாரப்பட்டது

குறிஞ்சிப்பாடி:குறிஞ்சிப்பாடி-குருவப்பன்பேட்டையில் உள்ள பெரிய ஏரிக்கு வரும் வடிகால் வாய்க்கால்கள் தூர்வாரப்பட்டது.

குறிஞ்சிப்பாடி அடுத்த குருவப்பன்பேட்டை கிராமத்தில் உள்ளது பெரிய ஏரி. இந்த ஏரிக்கு என்எல்சி சுரங்கம்- 1, சுரங்கம்-1 ஏ ஆகியவற்றில் இருந்து வெளியேற்றப்படும் உபரிநீர் செங்கால் ஓடையின் வழியாக வாய்க்கால் மூலம்

பெரிய ஏரிக்கு வரும். ஆனால் இந்த வாய்க்கால் தூர்வாரப்படாமல் இருந்தது.

இதுகுறித்த செய்தி தினகரன் நாளிதழில் வெளியானது. இதன் எதிரொலியாக பெரிய ஏரிக்கு செல்லும் வடிகால் வாய்க்கால் என்எல்சி நிர்வாகம் சார்பில் தூர்வாரப்பட்டது. இதன்மூலம் கல்குணம் , பூதாம்பாடி, வரதராஜன்பேட்டை, குருவப்பன்பேட்டை உள்ளிட்ட 10க்கும் மேற்பட்ட கிராமங்களில் சுமார் 600க்கும் மேற்பட்ட ஏக்கரில் பயிரிடப்பட்டுள்ள பயிர்கள் மகசூல் பெருகும் என தெரிகிறது.

இது குறித்து குருவப்பன்பேட்டை பகுதி விவசாயிகள் கூறுகையில் , பெரிய ஏரிக்கு வரும் வாய்க்கால் தூர்வாரப்படாமல் இருந்ததால், தண்ணீர் செல்வதற்கு வழியில்லாமல் இருந்தது. தற்போது என்எல்சி நிர்வாகம் வாய்க்காலை தூர்வாரி கொடுத்துள்ளது, என்றார். ஏரியை தூர்வார துரிதமாக நடவடிக்கை எடுத்த அதிகாரிகளை விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் பாராட்டினர்.

### கால்நடை மருத்துவமனை கட்டும் இடம்

பண்ருட்டி: பண்ருட்டி அருகே பத்திரக்கோட்டையில் ஏராளமான கால்நடைகள் உள்ளன. சுற்றியுள்ள பல்வேறு கிராமங்களில் இதுவே முதன்மை கிராமமாக உள்ளது. இப்பகுதியில் கால்நடை மருத்துவமனை நிறுவ வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்தனர்.இதையடுத்து புதிதாக கால்நடை மருத்துவமனை கட்டிடம் கட்ட ரூ. 25 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. கட்டிடம் கட்டும் இடத்தை நெய்வேலி சட்டமன்ற உறுப்பினர் சபா ராஜேந்திரன் பார்வையிட்டார். அப்போது அங்கிருந்த பொதுமக்களிடம் , கட்டிடம் விரைவில் கட்ட வழிவகை செய்யப்படும் என எம்எல்ஏ உறுதி

அளித்தார். ஊராட்சி செயலாளர் நடராஜன் , வார்டு செயலாளர் தாயார் , மணிவாசகம், அவைத்தலைவர் பழனிவேல், நிர்வாகிகள் சுரேஷ், பாண்டியன், வேலாயுதம் சிகாமணி , மகளிரணி செயலாளர் சங்கீதா உள்பட பலர் உடன் இருந்தனர்.

## எள்ளில் மேலாண்மை பயிற்சி

நாமக்கல்: நாமக்கல் வேளாண் அறிவியல் நிலைய இணைபேராசிரியர் அகிலா வெளியிட்ட செய்தி:

நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில் , இம்மாதம் 10ம் தேதி (செவ்வாய்க்கிழமை) காலை 9 மணிக்கு ஆமணக்கு , எள் மற்றும் பயறு வகைப்பயிர்களில் ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மை என்ற தலைப்பில் ஒருநாள் இலவசப்பயிற்சி நடைபெற உள்ளது.

இப்பயிற்சியில் ஆமணக்கு , எள் மற்றும் பயிர்களின் சாகுபடிக்கேற்ற மண்வளத்தினை கண்டறியும் வழிமுறைகள் , மேம்படுத்தும் உத்திகள் பற்றிய தெளிவான விளக்கமளிக்கப்பட உள்ளது.இதில் விவசாயிகள் , பண்ணையாளர்கள், ஊரக மகளிர் , இளைஞர்கள் மற்றும் ஆர்வமுள்ளவர்கள் கலந்து கொள்ளலாம். விருப்பமுள்ளவர்கள் நாமக்கல் - மோகனூர் சாலையில் உள்ள கால்நடை மருத்துவக் கல்லூரி , ஆராய்ச்சி நிலைய வளாகத்தில் செயல்பட்டு வரும் வேளாண் அறிவியல் நிலையத்திற்கு நேரில் வரும் 9ம் தேதிக்குள் (திங்கட்கிழமை) பெயரை முன்பதிவு செய்து கொள்ள வேண்டும். பயிற்சிக்கு பதிவு செய்ய நாமக்கல் மாவட்ட விவசாயிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## தமிழ்நாடு கோழிப்பண்ணையாளர்கள் சங்க புதிய நிர்வாகிகள் பதவியேற்பு

நாமக்கல்: தமிழ்நாடு கோழிப்பண்ணையாளர்கள் சங்க புதிய நிர்வாகிகள் பதவியேற்பு விழா நாமக்கல்லில் நடந்தது. தலைவராக சின்ராஜ் பொறுப்பேற்று கொண்டார். சத்துணவு திட்டத்துக்கான முட்டையை பண்ணையாளர்களிடம் இருந்து கொள்முதல் செய்ய வலியுறுத்தப்பட்டது.நாமக்கல்லை தலைமையிடமாக கொண்டு செயல்படும் தமிழ்நாடு கோழிப்பண்ணையாளர்கள் சங்கத்தின் பொதுக்குழு மற்றும் புதிய நிர்வாகிகள் பதவி ஏற்பு விழா நேற்று நாமக்கல்லில் நடைபெற்றது. சங்க தலைவர் நல்லதம்பி தலைமை வகித்தார். உதவித்தலைவர் மணி (எ) வெங்கடாசலம் வரவேற்று பேசினார். ராசிபுரம் ஏகேபி குரூப்ஸ் தலைவர் பழனியப்பன் முன்னிலை வகித்தார். புதிய நிர்வாகிகளுக்கு நாமக்கல் மண்டல தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழு தலைவர் செல்வராஜ் பதவி பிரமாணம் செய்து வைத்தார். இதில், தலைவராக ஏ.கே.பி சின்ராஜ் , செயலாளராக சுந்தர்ராஜன் , பொருளாளராக இளங்கோ , உதவி தலைவராக மணி (எ) வெங்கடாசலம் , உதவி செயலாளராக ஆனந்த் ஆகியோர் பதவி ஏற்றுக்கொண்டனர். நிர்வாக குழு உறுப்பினராக குணசேகரன் , கணபதி, சோமசுந்தரம், துரைசாமி, லோகநாதன், ராஜாமணி, கே.செந்தில்குமார், டி.செந்தில்குமார், எஸ்.செந்தில்குமார், ரவி, விஜய், சின்னதுரை, பனிமலர், நாகராஜன், பிரபு, தங்கமுத்து ஆகியோரும் பொறுப்பேற்று கொண்டனர்.புதிய நிர்வாகிகளை நாமக்கல் கால்நடை மருத்துவ கல்லூரி முதல்வர் குணசீலன் , தமிழ்நாடு முட்டைக்கோழி பண்ணையாளர்கள் சம்மேளன தலைவர் முத்துசாமி , கோழித்தீவன மூலப்பெருட்கள் விற்பனை சங்க தலைவர் பழனிவேல் , கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைகழக முன்னாள் மேலாண்மை உறுப்பினர் கந்தசாமி , செயலாளர் ராஜவேல் , துணை தலைவர் கண்ணன் , ஞானம், துணை செயலாளர் முத்துசாமி, பொருளாளர் சின்னுசாமி உட்பட பலர்

வாழ்த்தி பேசினர்.கூட்டத்தில் நல்லதம்பி பேசுகையில் , 'சங்கம் தொடங்கிய காலம் முதல் கடந்த 24 ஆண்டாக தலைவராக இருந்துள்ளேன் என்றார்.புதிய தலைவர் சின்ராஜ் பேசுகையில் , 'தமிழக அரசின் சத்துணவு திட்டத்துக்கு , ஒரே டெண்டர் நடத்தப்பட்டு , தனியார் நிறுவனம் மூலம் தமிழக அரசு முட்டை கொள்முதல் செய்கிறது. இதனால் கோழிப்பண்ணையாளர்களுக்கு சரியான விலை கிடைக்கவில்லை. சத்துணவு திட்டத்துக்கு நேரடியாக கோழிப்பண்ணையாளர்களிடம் முட்டை கொள்முதல் செய்ய வேண்டும். வறட்சியின் காரணமாக நிலத்தடி நீர் குறைந்து , தேவையான தண்ணீர் கிடைப்பதில்லை. இத னால் , கோழிப்பண்ணை தொ ழில் செய்ய முடி யாத நிலை உள்ளது. எனவே , கோழிப்பண்ணைகளுக்கு லாரி மூலம் தண்ணீர் எடுத்து செல்ல அனுமதிக்க வேண்டும். நாமக்கல்லை தனி ஏற்றுமதி மண்டலமாக மத்திய அரசு அறிவிக்க வேண்டும் ' என்றார். உதவி செயலாளர் ஆனந்த் நன்றி கூறினார்.

## சான்று விதைகளை உபயோகித்தால் கூடுதல் மகசூல் பெறலாம் துணை இயக்குநர் தகவல்

ராமநாதபுரம்: சான்று பெற்ற விதைகளை உபயோகித்தால் கூடுதல் மகசூல் கிடைக்கும் என விதை ஆய்வு துணை இயக்குநர் செல்வபாண்டி கூறினார்.இதுகுறித்த அவரது அறிக்கை. ராமநாதபுரம் மற்றும் சிவகங்கை மாவட்டங்களில் பருத்தி சாகுபடி செய்யவுள்ள விவசாயிகள் தங்கள் பகுதியில் உள்ள விதை வணிகம் செய்ய உரிமம் பெற்ற அரசு , அரசு சார்பு மற்றும் தனியார் விதை விற்பனையாளர்களிடம் தரமான விதைகளை வாங்க வேண்டும். பயிர் ரகம் , குவியல் எண் , காலாவதி நாள் ஆகிய விபரங்களை சரிபார்த்து விற்பனை பட்டியல் பெற்று விதைகளை வாங்க வேண்டும்.தரமான

சான்று பெற்ற விதைகளை உபயோகித்தால் 20 சதவிகிதம் வரை கூடுதல் மகசூல் கிடைக்க வாய்ப்புள்ளது. சாக்கு மூடைகளில் எந்தவிதவிபரமும் இல்லாமல், தரமற்ற விதைகளை விற்பனை செய்பவர்களை பற்றி ராமநாதபுரம் விதை ஆய்வு துணை இயக்குநர் அலுவலகத்தில் புகார் செய்தால் , நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கர்நாடகாவுக்கு ரூ.1782.44 கோடி வறட்சி நிதி: மத்திய அரசு ஒப்புதல்

டெல்லி: வறட்சி நிவாரண நிதியாக கர்நாடகாவுக்கு ரூ. 1782.44 கோடி ஒதுக்க மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. உள்துறை அமைச்சர் தலைமையில் டெல்லியில் நடந்த ஆலோசனை கூட்டத்தில் வறட்சி நிவாரண நிதி அளிக்க மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. வெள்ளம் பாதித்த உத்தரகாண்ட் மாநிலத்துக்கும் ரூ.208.91 கோடி நிவாரண நிதி அளிக்க மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.